முள்ளிவாய்க்கால் எப்போதும் - முற்றுப்புள்ளி ஆகாது…
மாவீரர் கனவுகள் - செல்லரித்து போகாது…
முள்ளிவாய்க்கால் எப்போதும் - முற்றுப்புள்ளி ஆகாது…
மாவீரர் கனவுகள் - செல்லரித்து போகாது…

ஆண்ட இனம் தான் எப்போதும் - ஆளாமல் வீழாது…
தமிழ் ஈழப் போராட்டம் - விடியாமல் முடியாது…
ஆண்ட இனம் தான் எப்போதும் - ஆளாமல் வீழாது…
தமிழ் ஈழப் போராட்டம் - விடியாமல் முடியாது…
முள்ளிவாய்க்கால் எப்போதும் முற்றுப்புள்ளி ஆகாது…
மாவீரர் கனவுகள் - செல்லரித்து போகாது…

காயம் பட்டக் கனவினை - தூக்கிக் கொண்டு போனோம்…
எம் ஈழ மண்ணில் உயிரை விட்டு - எலும்புக்கூடாய் நடந்தோம்…
காயம் பட்டக் கனவினை - தூக்கிக் கொண்டு போனோம்…
எம் ஈழ மண்ணில் உயிரை விட்டு - எலும்புக்கூடாய் நடந்தோம்…
உறவுகள் துறந்து விட்டு - இரவுகள் சுமந்தோம்…
எம் முகவரி இழந்து விட்டு அகதியாய்த் திரிந்தோம்…
மரணத்தைக் கழுத்திலே கட்டிக் கொண்டு கடந்தோம்..
எம் தேசத்திற்கு மரணத்தை தாய் மண்ணிலே விதைத்தோம் - தாய் மண்ணிலே விதைத்தோம்..

முள்ளிவாய்க்கால் எப்போதும் - முற்றுப்புள்ளி ஆகாது...
மாவீரர் கனவுகள் - செல்லரித்து போகாது…

தொலைந்த எங்கள் வாழ்வைத் தேடி, அலைந்து திரிந்து தேய்ந்தோம்…
எம் கறை படிந்த கனவு தன்னை - அழுகையில் கரைத்தோம்…
தொலைந்த எங்கள் வாழ்வைத் தேடி, அலைந்து திரிந்து தேய்ந்தோம்…
எம் கறை படிந்த கனவு தன்னை - அழுகையில் கரைத்தோம்…
வாடகைக்கு காற்று வாங்கி - வாழ்க்கை வாழ்ந்தோமே…
இனி வாழ்ந்த எங்கள் வாழ்வு தன்னை - நினைவில் வைப்போமே…
சுவாசிக்க மூச்சுக்காற்றும் - கந்தகத்தில் கரைந்தது…
நினைத்துக் கிடந்த கடவுள் கூட இரங்கவில்லையே… மனம் இரங்கவில்லையே…

முள்ளிவாய்க்கால் எப்போதும் - முற்றுப்புள்ளி ஆகாது…
மாவீரர் கனவுகள் - செல்லரித்து போகாது…

ஆண்ட இனம் தான் எப்போதும் - ஆளாமல் வீழாது…
தமிழ் ஈழப் போராட்டம் - விடியாமல் முடியாது…
ஆண்ட இனம் தான் எப்போதும் - ஆளாமல் வீழாது...
தமிழ் ஈழப் போராட்டம் - விடியாமல் முடியாது…
முள்ளிவாய்க்கால் எப்போதும் முற்றுப்புள்ளி ஆகாது...
மாவீரர் கனவுகள் - செல்லரித்து போகாது…